வெற்றியும் அதனைப் பெறுவதற்கான வழிமுறைகளும்

கலாநிதி க.ஞானரெத்தினம்

அறிமுகம்:

“வெற்றி” இது அனைவருக்கும் விருப்பமான ஒரு சொல்லாகும். ஒவ்வொருவரும் வெற்றியை எதிர்பார்த்தே அனைத்துச் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். செயற்பாடுகளின் வடிவங்கள் பல வகையாக இருந்தபோதிலும் அனைவரினதும் இறுதி இலக்கு வெற்றி பெறுவதாகவே இருக்கும். பாடசாலை என்ற நிறுவனத்தில் கடமையாற்றுகின்ற அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆயினும் அனைத்து தரப்பினரினதும் எதிர்பார்ப்பு அல்லது அறுவடை வெற்றியாகவே அமைந்து விடுகின்றது. கற்பித்தல் செயற்பாட்டில், மாணவர்களை வெற்றி கொண்ட ஆசிரியர் ஒருவர் வெற்றிகரமான ஆசிரியராகின்றார். அதேபோல் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்ற மாணவர் ஒருவர் பரீட்சையை வெற்றி கொள்ளும் போது சாதனையாளராக மாறிவிடுகின்றார். ஆயினும் “வெற்றி” என்பது அனைவருக்கும் கிடைத்து விடுவதில்லை. மிகவும் குறைவானவர்களே வெற்றிக்குச் சொந்தக்காரராகி விடுகின்றனர். வெற்றிக்காகப் பிறந்த மனிதன் தோல்விக்குச் சொந்தக் காரணாகி விடுகின்றான். இதற்கான காரணம் என்ன? வெற்றியில் எவ்விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன? என்பவற்றை அறிவதனையே பிரதான நோக்கமாக இவ் ஆக்கம் கொண்டுள்ளது.

வெற்றி :

வெற்றி என்பது செல்வம் எனவும் சிலர் கருதுகின்றனர். இன்னும் சிலர் வெற்றி என்பது கல்வி, பதவி, கௌரவம், நல்ல குடும்பம், மனநிம்மதி, நல்ல உடல் நலம் எனவும் கருதுகின்றனர். ஒவ்வொருவரும் இதற்கு வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளனர். ஆயினும்

> “ஒரு மதிப்பு வாய்ந்த இலக்கை
> படிப்படியாக அடைதலே வெற்றியாகும்”
>
> - ஏர்ல் நைடிங் கேல்

மாணவர்கள் எதிர்காலத் தலைவர்கள் மட்டுமல்ல ஒரு நாட்டின் வளமும் ஆவர். இதன் காரணமாகவே ஒவ்வொரு அரசும், மாணவர்களுக்குக் கல்வியை வழங்குவதற்கு அதிக பிரயத்தனம் எடுக்கின்றன. ஆயினும் கல்வியில் மாணவர்களை உள்வாங்குவதில் அல்லது உள்வாங்கிய மாணவர்களின் சாதனை மட்டத்தில் எமது நாட்டில் திருப்திகரமான நிலை காணப்படவில்லை என்பதனை பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. வெற்றிக்காகப் பிறந்த மாணவர்கள் தோல்வியைத் தழுவிச் செல்வது கவலையளிக்கும் ஒரு விடயமாகும். வெற்றி என்பது தற்செயலாக நிகழ்வதில்லை. மேலும் இலகுவாகக் கிடைப்பதும் இல்லை. இது அதிஷ்டத்துடன் தொடர்புபட்டுள்ளது என்று கூறவும் முடியாது.

Gnanam

மாறாக எம்மைத் தேடி வரக்கூடியதுமல்ல. "வெற்றி" பெறுவது ஒவ்வொருவரினதும் மனப்பாங்கின் விளைவே ஆகும். ஒவ்வொருவரும் வெற்றியைப் பெறுவதற்கான வழிமுறைகளைச் சிந்தித்துச் செயற்படுத்துவதன் மூலம் வெற்றியாளர்களாக மாறிக் கொள்வதற்கான வாய்ப்பை அதிகரிக்கச் செய்ய முடியும்.

கடந்த காலங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது பல்வேறு கால கட்டங்களிலும் பல வெற்றியாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரிடமும் பொதுவான பண்புகள் பல இருக்கின்றன. அத்தகைய பண்புகளை நாம் அடையாளங்கண்டு, அவற்றை ஏற்றுக் கொண்டு எமது வாழ்விலும் பயன்படுத்தினால் நாமும் வெற்றியாளராகி விடுவோம். அதுபோல் தோல்வியடைந்தவர்களும் பொதுவான பல பண்புகளைக் கொண்டிருப்பார்கள். அத்தகையை பண்புகளை நாம் தவிர்த்துக் கொள்வதும் அவசியமானதாகும். தோல்வியே வெற்றிக்கான நெடும்பாதையாகும். எல்லா வெற்றிக்கதைகளிலும் பல தோல்விக் கதைகள் சேர்ந்தே இருக்கும்.

> "நீங்கள் வெற்றிபெற விரும்பினால் உங்களுடைய
> தோல்வியின் சதவீதத்தை இரண்டு மடங்கு ஆக்குங்கள்".
>
> \- டாம் வாட்சன் சீனியர்

தோல்வியை அடைந்தவர்கள் இரண்டு வகையினர்.

1. சிந்திக்காமல் செயலாற்றியவர்கள்
2. சிந்தித்துவிட்டு செயலாற்றாமல் விட்டவர்கள்

ஒவ்வொரு வெற்றியாளர்களும் ஏனையவர்கள் செய்கின்ற காரியங்களையே செய்கின்ற போதிலும் அவர்கள் செய்கின்ற முறைகளில் வித்தியாசத்தை, நுணுக்கத்தை, சிறப்பை அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக எல்லா ஆசிரியர்களும் கற்பிக்கின்றார்கள். அவர்களின் கடமையும் அதுவே. ஆயினும் தமது கற்பித்தல் பணியை மாணவர்களின் தேவை, விருப்பு, கவர்ச்சி அறிந்து கல்விச் சமூகம் எதிர்பார்ப்பது போன்று நவீன உத்திகளைக் கையாண்டு கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவர் "வெற்றிகரமான ஆசிரியராக" மாறிவிடுகின்றார்.

ஒருவர் வெற்றியாளர் ஆவதற்கான பண்புகள்:

1. ஆசை (Disire)

வெற்றியின் அடிப்படையே "ஆசை" தான். நாம் எதனை வெற்றிபெற விரும்புகின்றோமோ அதில் ஆசை கொள்ள வேண்டும். இந்த ஆசை அளவு கடந்ததாக இருக்கவேண்டும். ஆசையில் இருந்துதான் வெற்றி பெறுவதற்கான தூண்டுதல் வருகின்றது. ஒரு சிறிய துவாரத்தால் எப்படி அதிக ஒளியைத் தர முடியாதோ அதுபோல் ஒரு பலவீனமான ஆசையால் மிகப்பெரிய சாதனையை உருவாக்க முடியாது.

ஒவ்வொருவரும் தமது எதிர்காலம் பற்றி ஓர் பெறுமதியான இலட்சியத்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்த இலட்சியத்தின் மீது தீராத ஆசை கொள்ள வேண்டும். ஆசையை அடிப்படையாகக் கொண்டு எமது ஒவ்வொரு செயற்பாடுகளையும் வகுத்துக் கொள்ளவேண்டும். எமது இலட்சியத்தை அல்லது ஆசையை அடைவதற்கான சாதகமான விடயங்களும், தடையான விடயங்களும் எமக்குள்ளே அல்லது எம்மைச் சுற்றியே இருக்கின்றன. தடையான விடயங்களை இனங்கண்டு அதனைத் தவிர்த்துக் கொள்வது அவசியமானதாகும். உதாரணமாக கல்வி கற்கின்ற ஒரு மாணவனுக்கு தனது இலட்சியமானது பொறியியலாளர், மருத்துவர், கணக்காளர், சட்டத்தரணி, சிறந்த ஆசிரியர் என்று அமையலாம். இதனை அடைவதற்கான சாதகமான விடயங்களாக நல்ல பெற்றோர், சிறந்த பாடசாலை, வெற்றிகரமான ஆசிரியர்கள், நல்ல நண்பர்கள் என்பன போன்றவை இருக்கலாம். தடையான விடயங்களாக அதிக நித்திரை, தொலைகாட்சி, இணையம், தொலைபேசி, பொருத்தமற்ற நண்பர்கள்,தேவையற்ற விடயத்தில் அதிக நாட்டம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இம்மாணவன் தனக்குள்ள தடைக்காரணிகளை இனங்கண்டு படிப்படியாக அவற்றை தவிர்ப்பதற்கான வழிமுறைகளை சிந்தித்தல் வேண்டும். பெறுமதிமிக்க தனது இலட்சியத்தின் மீது தீராத ஆசை கொள்ளும் போது மாணவனுக்குள்ள தடைக்காரணிகள் தானாகவே இல்லாமலும் போய்விடுகின்றன. மனிதனின் பெறுமதிமிக்கவன். அதுமட்டுமல்ல அபார சக்தி கொண்டவன். மனிதனுக்கு எதனையும் சாதிக்க வல்ல ஆற்றலை இறைவன் கொடுத்திருக்கின்றான்.

“மனிதனின் மனம் எதை எல்லாம் சிந்தித்து நம்புகின்றதோ,
அதையெல்லாம் உண்மையிலே சாதித்துவிடும்”

- நெப்போலியன் -

2. உறுதி **(Commitment)**

நல்லவே எண்ணுதல் வேண்டும்
எண்ணுதல் முடிதல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்

- மகாகவி பாரதி-

இலட்சியத்தை வகுத்துக்கொண்ட ஒருவர்.தனது இலட்சியத்தின் மீது உறுதி கொண்டவராக இருத்தல் வேண்டும். இலட்சியப் பயணத்தில் பல தடைகள், சவால்கள், தோல்விகளைச் சந்திக்க வேண்டிவரலாம். இவற்றைக் கண்டு மனம் சோராமல் வெற்றி பெறும் வரை திண்ணிய நெஞ்சம் கொண்டவராக இருத்தல் வேண்டும். இன்று பலர், இலட்சியத்தை வகுத்துக் கொள்கின்றார்கள். அதற்கான பல திட்டங்களையும் ஆரம்ப காலத்தில் தீட்டுகின்றனர்.

Gnanam

ஆயினும் காலப்போக்கில் தன்பாதையை மறந்து புதிய பாதையைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். இதன்காரணமாக வெற்றிக்கான பயணமும் திசைமாறி விடுகின்றது அல்லது நீண்டு போகின்றது.

க.பொ.த(சா/த)பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த மாணவர் பலர் தனது க.பொ.த(உ/த)வகுப்பு ஆரம்பக்காலத்தில் தீவிரமான ஆர்வம் உள்ளவராக காணப்படுகின்றனர். பல திட்டங்கள், புதிய ஏற்பாடுகள் எல்லாம் நடைமுறைப் படுத்துகின்றனர். ஆயினும் சில மாதம் கடந்த பின்னர் அத்தனை முயற்சிகளும் குறைந்து விடுகின்றன அல்லது இல்லாமல் போய்விடுகின்றன. இதனால் அவர்களது உயர்தரப்பரீட்சை முடிவும் மாறாகவே அமைந்து விடுகின்றது. உறுதியற்ற நிலையே அவர்களது தோல்விக்குக் காரணமாகி விடுகின்றது.

> "ஒருவன் எந்தத்துறையில் இருந்தாலும், அவனது வாழ்க்கைத் தரம் தனது வேலையை சிறப்பாகச் செய்ய அவன் எந்தளவு உறுதி கொண்டிருக்கின்றான் என்பதைப் பொறுத்தது.
>
> - வின்ஸ் லொம்பாக்டி -

3. பொறுப்பு (Responsibility)

எவரொருவர் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்கின்றாரோ அவரே வெற்றியாளராகி விடுவர். பொறுப்புக்கள் கொடுக்கப்படுவதில்லை. மாறாக அவை எடுக்கப்படவேண்டியவை. பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் போது சில ஆபத்துக்களும்,பதில் சொல்லும் கடமையும் உண்டு. இவை சற்று சிரமமானவையாக இருந்தாலும் கூட எம்மை வெற்றிப் பாதைக்கு கொண்டு போய்விடும்.

> "மற்றவருக்காகச் செய்யும் சிறு உதவியும்
> உன்னுள் மாபெரும் சக்தியை ஏற்படுத்திவிடும்
>
> - சுவாமி விவேகானந்தர் -

வாழ்க்கையில் பல வெற்றியாளர்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் அனைவரும் சமூகத்தின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டவராகவே இருந்துள்ளனர். பாடசாலையில் அதிபர் ஒருவரால் மட்டும் பாடசாலையை நடத்திவிட முடியாது. ஆசிரியர் சமூகம் பல பொறுப்புக்களை தானாக முன்வந்து ஏற்றுக் கொள்ளும் போது அவர்கள் வெற்றிகரமான ஆசிரியராக மிளிர்வதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனூடாக மாணவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகவும் இருக்க முடியும். மாணவர்களும் பாடசாலை கடமைகளிலும் தமது கற்றல் செயற்பாடுகளிலும் பொறுப்புக்களை மன விருப்புடன் ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியமானதாகும்.

4. கடின உழைப்பு (Hard Work)

வெற்றி அடைவதற்கு கடின உழைப்பு அவசியமானதாகும். தியாகமும் சுய கட்டுப்பாடும் கடின உழைப்பை ஊக்குவிக்கின்றன.

> "நீங்கள் எவ்வளவு கடினமாக உழைக்கின்றீர்களே
> அந்தளவுக்கு அதிஷ்டசாலி ஆவீர்கள்"
>
> \- ஹென்றி ∴ போட்

எல்லோருக்குமே வெற்றி பெற விருப்பமிருக்கின்றது. ஆயினும் ஒரு சிலரே அவ்வெற்றிக்காக உழைத்து வெற்றியும் பெறுகின்றனர். இவ் உலகில் அனைவருக்கும் கடமை இருக்கின்றது. மனிதன், பறவை, விலங்கு என்று இதில் வேறுபாடில்லை. ஒரு பறவை நீண்ட தூரம் பறந்து சென்று தன் குஞ்சுக்கு இரைதேடி வருகின்றது. குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் அனைவருக்குமே கடமையிருக்கின்றது. ஒவ்வொருவரும் தமது கடமைக்காக கடினமாக உழைக்கும் போது அவர்கள் சாதனைக்கு அதிபதியாகிவிடுகின்றனர்.

பாடசாலையில் அதிபர் கடினமாக உழைக்கும் போது பாடசாலையின் பெயர் வரலாற்றில் பொறிக்கப்படும். ஆசிரியர் கடினமாக உழைக்கும் போது மாணவரின் சாதனைமட்டம் அதிகரிக்கும். மாணவர் கடினமாக உழைக்கும்போது அவரது இலட்சியம் நிறைவேறிவிடும். முக்கியமாக மாணவர்கள் "சுயகற்றல்" செயற்பாட்டில் கடினமாக உழைக்கவேண்டும். இன்று அதிகமான மாணவர்கள் கற்றல் என்பது பிரத்தியேக வகுப்புச் செல்வது என்றே நினைக்கின்றனர். மாணவர்கள் கல்வியில் சாதனை செய்வதற்கு "சுய கற்றல்" ஈடுபாடு மிக அவசியமானது என பல ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இன்று நாம் அனுபவிக்கும் எல்லா நன்மைகளும் யாரோ ஒருவருடைய கடின உழைப்பின் பலனாகும். இன்று சில பாடசாலைகளைச் சிறந்த பாடசாலைகளாக சமூகம் கருதுகின்றது. அத்தகைய பாடசாலைகளையே அனைவரும் விரும்புகின்றோம். எந்தவொரு அதிபரும் அதில் கடமையாற்ற விரும்புகின்றார். ஆசிரியர்களும் அதில் கற்பிக்க போட்டி போடுகின்றனர். மாணவர்களும் அதில் கற்கவே விரும்புகின்றனர். இந்த பெருமைக்கு காரணமானவர்கள் யார்? எமக்கு முன்னர் அந்த நிறுவனத்தில் கடமையாற்றியவர்களின் கடின உழைப்பே இந்தப்பெருமைக்கு காரணம் என்பதனை நாம் மறந்து விட முடியாது.

மேன்மை என்பது அதிர்ஷ்டத்தால் வருவதில்லை. அது கடின உழைப்பினதும் பயிற்சியினதும் பலன் ஆகும். கடின உழைப்பும் பயிற்சியும் ஒருவர் செய்கின்ற எந்தக்காரியத்தையும் சிறப்படையச் செய்யும். வெற்றி பெறுவதற்கு எந்த மந்திரக்கோலும் தேவை இல்லை. இந்த உலகில் வெற்றி என்பது செயலாற்றுபவர்களுக்குத்தான் கிடைக்கும். சிறிய சிறிய வேலைகளை நிறைவேற்றுவதற்குக் கூட கடின உழைப்புத் தேவைப்படுகின்றது. சிறிய வேலைகளை முடிப்பது பெரிய வார்த்தைகளைப் பேசுவதை விடச் சிறந்தது. பெறுமதியானவற்றையும், பெருமைக்குரியவற்றையும் கடின உழைப்பாளிகள் பெற்று விடுகின்றனர். எஞ்சியவையே சோம்பேறிகளின் சொத்தாகும்.

5. பண்பு (Character)

பண்பு என்பது நாணயம், சுயநலமின்மை, அனுதாபம், ஆழ்ந்த நம்பிக்கை, தைரியம், விசுவாசம், மரியாதை ஆகியவற்றின் கலவையாகும். வெற்றியாளர் ஆவதற்குப் பண்பு தேவை.

“என்னிடம் உள்ளவற்றிலே மிகவும் மதிப்பு வாய்ந்ததாக
நான் கருதுவது நேர்மையான மனிதருக்குரிய பண்பு தான்”
- ஜார்ஜ் வாஷிங்டன் -

அர்ப்பணிப்பு, முயற்சி என்பன வெற்றியைப் பெற்றுத்தந்தாலும், பண்பானது வெற்றியை தக்கவைத்துக் கொள்ளும். நமது நற்பண்புகள் எமக்கு நன்மையே தரக்கூடியவை. வெற்றிக்குரிய பாதையில் பல தடைகள் இருக்கலாம். இத் தடைகளில் விழுந்து விடாமல் இருப்பதற்கு நிறைய பண்புகள் அவசியமாகின்றன. வெற்றி பெற்றவர்களில் பலர் பண்பாளர்களாக இருந்ததில்லை. இதன் காரணமாக வெற்றியை அவர்களால் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. பாடசாலையில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் பல இலட்சியங்களைக் கொண்டிருக்கலாம். இவ் இலட்சியங்களை அடைவதற்கு அவர்களுக்கு பண்பு அவசியமாகின்றது. பாடசாலைச் சமூகம் எதிர்பார்க்கின்ற உயர்ந்த நல்லொழுக்கங்களை மாணவர்கள் கடைப்பிடிக்கும் போது தமது இலட்சியத்தை இலகுவாக அடைய முடியும். உதாரணமாக ஒரு மாணவன் “வைத்தியராக வரவேண்டும்” என்ற இலட்சியத்தைக் கொண்டிருப்பாராயின் ஒரு வைத்தியருக்குரிய பண்புகளை அவர் பாடசாலைக் காலத்தில் பின்பற்ற வேண்டியது அவசியமானதாகும். இதன் காரணமாகத் தான் தெய்வப்புலவர் திருவள்ளுவர் அவர்களும் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக போற்றுகின்றார். ஆகவே கீழ்படிவு, உண்மை பேசுதல், பெரியோர்களை மதித்தல், மற்றவர்களுக்கு உதவுதல், பாடசாலையை நேசித்தல், தம் கடமைகளை சரியாகச் செய்தல், இனிய வார்த்தை பேசுதல் போன்ற நற்பண்புகள் வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இன்றியமையாதவை ஆகும்.

6. நல்லவித நம்பிக்கை **(**Positire Believing**)**

எமது நல்ல வித மனப்பாங்கே எமது வெற்றிக்கு அடிகோலுகின்றது. நல்ல வித மனப்பாங்குடன் இருப்பதும் மன ஊக்கத்துடன் இருப்பதும் ஒவ்வொரு நாள் காலையும் நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டிய விடயங்களாகும். மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் போது நம்பிக்கையுடன் செல்லவேண்டும். பாடசாலையில் நல்ல பழக்க வழக்கங்களையும் போதிய அறிவையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதே அந்த நம்பிக்கை. பரீட்சைக்கு செல்லும் மாணவர் ஒருவர் பரீட்சையில் சித்தியடைய முடியும் என்ற நம்பிக்கையுடன் செல்ல வேண்டும். அப்போதுதான் அதில் வெற்றிபெற முடியும்.

விடாமுயற்சியும் மன உறுதியுமே எல்லா வல்லமையும் கொண்டது. விடாமுயற்சி என்றால் கடமைப் பொறுப்பும் , உறுதிப்பாடும் என்று அர்த்தமாகும். அதாவது விடாமுயற்சி என்பது தொடங்கிய வேலையை முடிக்கும் உறுதியாகும். பொதுவாக எல்லோருமே திட்டமிடுகின்றனர். சிலர் அதனை ஆரம்பித்தும் விடுகின்றனர். ஆனாலும் மிகவும் சிலரே சற்றும் சளைக்காமல், எல்லாக் கஸ்டங்களையும் தாங்கி, தாம் தொடங்கியதை எப்படியாவது முடித்து விடுகின்றனர். இவர்களே வெற்றியாளர்கள். தோல்வியாளர்கள் என்பவர்கள் வேலைகளை நல்லவிதத்தில் தொடங்கி பின் எதையுமே முடிக்காமல் விட்டுவிடுவார்கள். விடாமுயற்சிக்கு குறிக்கோள் அவசியம். குறிக்கோள் அற்ற மனிதன் ஒருபோதும் கடின முயற்சி கொள்ளவும்மாட்டான் மனத்திருப்தி அடையவும் மாட்டான். உதாரணமாக ஒலிம்பிக் போட்டியில் 100m ஓட்டப்போட்டியில் சில செக்கன்கள் மாத்திரம் திறமையைக் காட்ட நினைக்கும் ஓட்டவீரர்கள் பல வருடங்கள் பயிற்சி செய்கின்றார்கள். மாணவர்களும் விடாமுயற்சியுடன் தம் கடமையை செய்வார்களேயானால், அவர்களது இலட்சியத்தை இலகுவாக சாதித்துவிடுவார்கள்.

“பயிற்சி திறன் வளர்க்கும்
முயற்சி திருவினையாக்கும்”

7. செயற்பாட்டின் பெருமை (Pride of Performance)

ஒருவரது கடமை எதுவாகவும் இருக்கலாம். அக்கடமையை பெருமையுடன் செய்யும்போது தான் அவ்வேலை சிறப்பாக அமையும். ஒரு வேலையை நன்றாகச் செய்தோம் என்ற உணர்வே நமக்கு கிடைக்கும் மிகப்பெரிய பரிசாகும். பல வேலைகளை மோசமாகச் செய்வதனை விட சிறியவேலைகளை நன்றாகச் செல்வது என்பது சிறந்த தாகும். நாளைய வாழ்வுக்கான சிறந்த முதலீடு இன்று நாம் சிறப்பாகச் செய்யும் வேலைகள்தான்.

ஆசிரியர் தொழில் பெருமைக்குரிய ஒரு தொழிலாகும். மாணவர்களின் எதிர்காலத்திற்கு வழிகாட்டுபவர்கள் சிறந்த ஆசிரியர்களே. இது இறைவனுக்கு செய்கின்ற சேவையாகவும் கருதப்படுகின்றது. இதனால் ஆசிரியர் ஒவ்வொருவரும் தமது தொழில், செயற்பாடு என்பனவற்றில் பெருமை கொள்வது அவசியமானதாகும். பெருமை என்பது அகந்தையைக் குறிக்காது, மாறாக இது பணிவோடு கூடிய மனமகிழ்ச்சியைக் குறிக்கும். இதனாலேயே எம் முன்னோர் “செய்யும் தொழிலே தெய்வம்” என்றனர் அதுமட்டுமல்ல “கடமையே கடவுள்” எனவும் கூறுகின்றனர்.

8. சிறந்த வழிகாட்டியை தேர்ந்தெடுத்தல் (Get a Mentor)

ஒரு நல்ல குரு அல்லது வழிகாட்டியின் அனுபவ அறிவு எமக்கு முன்நோக்குப் பார்வையைத் தரும். இதனால்தான் “அனுபவமே மிகச் சிறந்த ஆசான்” என்கின்றனர். நல்ல குரு அல்லது வழிகாட்டி நமக்கு வாய்க்கப் பெறுவதே வெற்றியின் ஆரம்பமாகும்.

வெற்றியடைந்தவர்களின் வரலாற்றைப் பார்க்கும்போது வெற்றியாளர்களின் பின்னால் சிறந்த வழிகாட்டி இருந்திருப்பார். சாதனையை செய்யத் துடிக்கும் மாணவர்களுக்கு சிறந்த ஒரு வழிகாட்டி அவசியமாகும். அது அவரது ஆசிரியராகவோ அல்லது பெற்றோராகவோ இருக்கமுடியும். அடையவேண்டி இடம் எது? எதனை எப்படிச் செய்யவேண்டும்? என்பது எல்லாம் எமது வழிகாட்டிமூலம் நாம் இலகுவாக அறிந்து கொள்ள முடிகின்றது. இதனாலே "குருவில்லா வித்தை பாழ" என்கின்றனர். சுவாமி விவேகானந்தரின் பெருமைக்கு காரணமாக இருந்தவர், அவரின் குரு இராமகிருஷ்ண பரமஹம்சரே.

முடிவுரை.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி
என்பன வெற்றிக்கு இன்றியமையாதவை.
இவற்றிற்கு மேலாக அன்பு தேவை.

- சுவாமி விவேகானந்தர்.

"வெற்றி" என்பது ஒவ்வொருவருக்கும் விருப்பமானது என்பதும், இது தானாகவே எமக்கு கிடையாதது என்பதனையும் நாம் அறிந்து கொண்டோம். இலட்சியத்தை உருவாக்கிக் கொண்டு, அதற்காகக் கடினமாக உழைக்கின்ற ஒருவர் நிச்சயம் அந்த இலட்சியத்தை அடைந்து கொள்வார். இந்த உலகமும் அதனுடன் இணைந்த இயற்கையும் இதற்காகவே படைக்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் பொதுவான ஒரு சொத்தாக "நேரம்" எனும் வளம் இருக்கின்றது. இதனை பொருத்தமாக முகாமை செய்வதும் வெற்றிக்கு அவசியமாகும். அனாவசியமாக இழக்கப்படுகின்ற நேரம் மீண்டும் ஒருபோதும் எமக்கு கிடைக்கப்போவதில்லை. அத்துடன் மனதை ஒருமுகப்படுத்தும் வழிபாடு, தியானம் என்பனவும் வெற்றிக்கு இன்றியமையாதவை ஆகும். தினசரி சில நிமிடமாவது இவற்றில் ஈடுபடவேண்டும். மனதில் அமைதி இருந்தால் மாத்திரமே எத்தகைய செயற்பாட்டிலும் முழுமையாக நாம் ஈடுபட முடியும்.

"வெற்றி பெற விளையாடுங்கள்
தோல்வியைத் தவிர்ப்பதற்காக அல்ல"

-பதிப்புரிமை உடையது-